2025 – நவம்பர் மாதம் – 06 ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 80/2024 c/w 81/2024*

*2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1 , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW1, இலக்கியா |
| தந்தையார் பெயர் | : | இளங்கோவன் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | தட்டச்சர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் |
| வயது | : | 28 |

**தேதி: 06.11.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பெரம்பலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் இந்த வழக்கில் அவருக்காக சாட்சியம் அளிக்க என்னை அங்கீகரித்து கொடுத்த அங்கீகார கடிதத்தைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 21 U 5831 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்குண்டான பதிவு சான்றின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்குண்டான விவரங்கள்

அடங்கிய விவரங்களின் பதிவேட்டின் இணைய பதிவிறக்க நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்றிதழ் 25.11.2022–ம் தேதியுடன் காலாவதி ஆகிவிட்டது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு 18.03.2024–ஆம் தேதி அன்று பதிவு சான்று புதுப்பிக்கப்பட்டது. மேற்படி விபத்திற்குள்ளான TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை வாகன ஆய்வு செய்த பொழுது அதன் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் குறித்த விவரங்களை எங்கள் அலுவலகத்தில் உள்ள கணினியில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி மூ.சா.ஆ.3–ல் கண்ட வாகனத்திற்கு காப்பீடு, பதிவு சான்று, ஓட்டுநருக்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

விபத்து குறித்து காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில்தான் வாகன ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று ஓட்டுநருக்கு வாகன ஆய்வாளர் குறிப்பாணை கொடுத்ததாக மேற்படி மூ.சா.ஆ.2 மற்றும் மூ.சா.ஆ.3 ல் குறிப்பு இல்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு வாகனங்களின் ஓட்டுநருடைய ஓட்டுநர் உரிமம் குறித்த விவரங்களை தேடிப்பார்த்ததற்குண்டான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி இரண்டு வாகனங்களின் ஓட்டுநர்களுக்கும் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றும் நாங்கள் எங்கள் அலுவலகத்தில் சரிவர தேடிப்பார்க்காமல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. TN 10 T 5116 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்குண்டான ஆவணங்கள் அனைத்தும் சென்னை வளசரவாக்கம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்தான் இருக்கும் என்றும் அவற்றைப் பொறுத்து என்னால்

எவ்வித சாட்சியும் அளிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. மூ.சா.ஆ.5 ஆவணம் எங்கள் அலுவலக கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் மேற்படி ஆவணம் ஏற்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.